# மதுரை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு
# ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்,
# மதுரை.

**சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களாக பணியாற்ற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன**

மதுரை, மேலூர், வாடிப்பட்டி, திருமங்கலம், பேரையூர், உசிலம்பட்டி ஆகிய ஊர்களில் இயங்கும் மாவட்ட/ வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களாக பணியாற்ற கீழே குறிப்பிட்ட நபர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்தாரர்கள் மேலே குறிப்பிட்ட ஊரைச் சார்ந்தவராக இருக்கவேண்டும்.

- ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உள்பட)
- ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள்
- சமூகப்பணியில் முதுநிலைக் கல்வி பயிலும் மாணவர்கள்
- அங்கன் வாடி பணியாளர்கள்
- மருத்துவர்கள்/ உடல் நல நிபுணர்கள்
- மாணவர்கள் மற்றும் சட்டக் கல்லூரி மாணவர்கள்(அவர்கள் வழக்கறிஞராகப் பதிவு செய்யும் வரை)
- அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சங்கப் பிரமுகர்கள்
- மகளிர் குழுக்கள், மைத்ரி சங்கங்கள் மற்றும் வறியோரை உள்ளடங்கிய சுய உதவிக்குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள்.
- நீண்ட கால தண்டனை பெற்று சிறையிலுள்ள படித்த சிறைவாசிகள்.
- மாவட்ட/ வட்ட சட்டப்பணிகள் தன்னார்வ சட்டப்பணியாளர்கள் பணிக்கு பொருத்தமாக கருதும் நபர்கள்.

| | | |
|---|---|---|
| 1. | கல்வித் தகுதி | பள்ளி இறுதி வகுப்பில் (10ம் வகுப்பு) தேர்ச்சி பெற்றவராகவும் புரிந்துணரும் திறன் உடையவராகவும் இருத்தல் வேண்டும். |
| 2. | இதர தகுதிகள் | சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் இரக்கம், ஏனையவர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளும் தன்மை, கலப்படமற்ற தூய்மை ஆகிய அடிப்படை மனித குணங்களின் மீது ஒன்றி இருத்தல் எவ்வித பணப்பயனும் எதிர்பார்க்காமல் தன்னார்வ சேவை புரிதல், தங்கள் பணிகளில் இருந்து வருமானத்தை எதிர் நோக்காதவர்களாகவும், ஆனால் இச்சமூகத்தின் பலவீனமான பிரிவினர், வறியவர்கள் ஆகியோரை மேலுயர்த்துவதற்கான உறுதியும், உணரும் திறனும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். |
| 3. | வயது | 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும் |
| 4. | மதிப்பூதியம் | பணிபுரியும் நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.500/- மதிப்பூதியமாக வழங்கப்படும். |
| 5. | விண்ணப்பிக்க கடைசி நாள் | 17.05.2024 மாலை 5.30 மணி |
| 6. | பணிக்காலம் | தேர்வு செய்யப்படும் நாளிலிருந்து ஒரு ஆண்டு |
| 7. | பிற விபரம் | மதுரை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு 25 தன்னார்வலர்களும், மேலூர், வாடிப்பட்டி, திருமங்கலம், பேரையூர், உசிலம்பட்டி ஆகிய 5 தாலுகாவிற்கு தலா 5 நபர்களும் ஆக மொத்தம் 50 நபர்கள். இதில் மதுரை மாவட்டத்திற்கு தேர்வாகும் 25 தன்னார்வலர்களும், தேவைப்பட்டால் தலைவர், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு உத்தரவுப்படி இதர தாலுகாவிற்கு பணியாற்ற வேண்டும். |

விருப்பம் உள்ளவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்படிவத்தை மட்டுமே பதிவிறக்கம் செய்து, அவ்விண்ணப்படிவத்தினை தெளிவாக பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களின் நகல்களுடன் தபாலிலோ அல்லது நேரிலோ கீழே கண்ட முகவரிக்கு 17.05.2024 தேதியன்று மாலை 5.30 மணிக்குள்ளே அல்லது அதற்கு முன்பாகவோ மேற்படி அலுவலகத்திற்கு, அலுவலக வேலை நாட்களில் கிடைக்கப்பெறுமாறு அனுப்பக் கோரப்படுகிறது.

உயர்திரு. தலைவர் அவர்கள்
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
மாற்று சமரச தீர்வு மையம்,
ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் எதிரில்
மதுரை-625 020.

மேலும் விண்ணப்பதாரர்கள் நேர்காணல் குறித்த தேதி https:// districts.ecourts.gov.in/madurai இணையதளம் மூலமாக பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**குறிப்பு:** சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் பணி நிரந்தர பணி அல்ல. பணி நிரந்தரம் செய்ய உரிமை கோரமுடியாது.

07/5/24

தலைவர்/ முதன்மை மாவட்ட நீதிபதி
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
மதுரை.

PHOTO

## மதுரை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு
## சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் சேர்க்கை விண்ணப்பபடிவம்

| | | |
|---|---|---|
| 1. | பெயர் (பெரிய எழுத்துக்களில்)<br>Name (In Capital Letters) | |
| 2. | பாலினம் / Sex | |
| 3. | வயது / Age | |
| 4. | தகப்பனார் / கணவர் பெயர்<br>(Father's / Husband's Name | |
| 5. | கல்வித்தகுதிகள் / Educational Qualifications | |
| 6. | தொழில் சார்ந்த கல்வித்தகுதிகள்<br>Technical Qualification | |
| 7. | ஜாதி மற்றும் பிரிவு / Community / Caste | |
| 8. | மதம் / Religion | |
| 9. | அலுவலக விலாசம் / Office Address | |
| 10. | வசிப்பிட விலாசம் / Residential Address | |
| 11. | தொழில் / Occupation | |
| 12. | தொலைபேசி எண் / Telephone Number | |
| 13. | கைபேசி எண் / Mobile Number | |
| 14. | மின்னஞ்சல் முகவரி / E-mail Address | |
| 15. | எப்பகுதியில் சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டராக பணி செய்ய விரும்புகிறீர்கள்.<br><br>Place in which willing to work as Para Legal Volunteers<br>☐<br>மார்க் செய்யவும் - Tick in the Appropriate Column | மதுரை<br>வாடிப்பட்டி<br>உசிலம்பட்டி<br>பேரையூர்<br>மேலூர்<br>திருமங்கலம் |
| 16. | தாங்கள் ஏற்கெனவே சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டராக பணிபுரிந்திருந்தால் விவரம் மற்றும் செய்த பணிகள் குறித்த தெரிவிக்கவும்<br>Whether you have already worked as PLV? If so, details of Service rendered to be stated. | |
| 17. | குற்ற வழக்கு, சொத்து சம்மந்தப்பட்ட மற்றும் பிற நீதிமன்ற வழக்குகள் விண்ணப்பதாரருக்கு நிலுவையில் இருப்பின் அல்லது முடிவுற்றிருப்பின் அது பற்றி முழு விபரம் | |
| 18. | மேலும் தாங்கள் தெரிவிக்கும் தகவல்கள்<br>Other Information if any | |
| 19. | மேற்கண்ட தகவல்களுக்கான ஆவணங்களின் நகல் இணைக்கப்பட்டுள்ளதா? | ஆம் /இல்லை/எண்ணிக்கை: |

நாள் / Date:

இடம் / Place:

கையெழுத்து / Signature

**குறிப்பு:** சட்டம் சார்ந்த தொண்டர்கள் பணி நிரந்தர பணி அல்ல. பணி நிரந்தரம் செய்ய உரிமை கோரமுடியாது.